# தெளிவு

THELIVU - YOUTHS OF JAFFNA ARCHDEACONERY CHURCH OF CEYLON



"ஒருவன் எந்தளவு தன்னில் ஒன்றித்து உள்ளத்தில் தெளிவு பெற்றிருக்கிறானோ அந்த அளவு அதிகமானவற்றையும் மேலானவற்றையும் எளிதாகப் புரிந்து கொள்கிறான். ஏனென்றால் அவன் இறைவனில் இருந்து அறிவின் தெளிவைப் பெறுகிறான்."

UNIVERSITY OF JAFFNA LIBRARY






'வன்முறை ஒழித்தல்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு யாழ்.கிறிஸ்தவ ஒன்றிய தலைவர் வண.A.A.போல் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றபோது சிறப்புரையாற்றிய நோர்வே திருச்சபைக் குரு வண.ஸ்ரிக் யுட்றெம் அடிகளும், தேசிய கிறிஸ்தவமன்ற பொதுச் செயலாளர் வண.ஜேசப் எபனேசர் அடிகளாரும். இரண்டாவது படத்தில் கலந்து கொண்ட மக்கள் கூட்டத்தையும் காண்கறீர்கள்.



மருதனார் மடம் ஆச்சிரமத்தில் சாம் அண்ணனின் நினைவு மண்டபத்தை திறந்து வைத்த ஆயர் அதிவண.DR.S. ஜெபநேசன் ஆண்டகையுடன் யாழ்குருமுதல்வர் வண.S.P. நேசக்குமார் அடிகள். மெதடிஸ்த குருமுதல்வர் வண.K. கருணசேகரா அடிகள். கானான் ஜெபக் குழுத் தலைவர் வண.R.B. எபனேசர் அடிகள் சேர்ந்து நிற்கும் காட்சி.

# உள் நாட்டு யுத்தம் உலக அரங்கில் வீட்டின் கதவுகளைத் தட்டியது

*- சர்வதேச விவகாரத்திற்கான செயலாளர் -*

**நான் ஒரு சர்வதேச பிரதிநிதியாக இருந்தபோதும் நான் உங்களைத் தேடிவந்தது உங்களுக்கு சமாதானத்தை பெற்றுத்தரவோ அதனைப் பற்றி பேச்சு வார்த்தை நடத்தவோ அல்ல. இன்று உங்கள் நாட்டு யுத்தம் உலக அரங்கில் உரத்துப் பேசப்படுகின்றது. இதனை என் வீட்டின் கதவுகள் தட்டப்பட்ட தனாலே அறிந்துள்ளேன். இதுவே இன்று உங்கள் மத்தியில் உங்களோடு கலந்து பேசிப் பகிர்ந்து கொள்ள வைத்தது என்று சர்வதேச விவகாரத்திற்கான செயலாளரும், நோர்வே திருச்சபையின் பணியாளருமாகிய" Rev.Dr. ஸ்ரிக் யுட்நெம் (Rev.Dr.Stig Utnem) அடிகளார் யாழ்.கிறிஸ்தவ ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "வன்முறை ஒழித்தல்" என்ற தலைப்பில் நடைபெற்ற ஒருநாள் கருத்தரங்கில் சிறப்புரையாற்றினார்.**

மேலும் அவர் உரையாற்றுகையில் இதற்கான விடிவு சகல ஆன்மீக ஆர்வமுள்ள திருச்சபைகள் ஒன்றுபடும் போது தான் உண்மையான தீர்வை காணலாம். எமக்குள்ளே பிரிவினைகளை வைத்துக் கொண்டு ஒற்றுமைகள் பற்றிப் பேசுவதில் பயனில்லை. எமக்குள்ளே சமாதானத்தை ஏற்படுத்துவதில் நாம் முயன்றாலே எம் நாட்டிலும் சமாதானத்தை காணமுடியும். இதுவே இறைசித்தத்தின் திட்டமும் ஆகும்.

1985, 86ம் ஆண்டுகளில் இலங்கையைச் சேர்ந்த 8 இளைஞர்கள் என் வீட்டுக் கதவைத் தட்டி தங்கள் நாட்டு யுத்த தாக்கத்தின் விளைவுகளை கூறி தஞ்சம் கேட்டுவந்தார்கள். அதற்கு உதவ முன் வந்தேன். இது உலகெங்கும் தொடர்கதையாக இருந்ததை உணர்ந்த எமது தேசிய கிறிஸ்தவ திருச்சபைகள் இதற்கு ஒரு விடிவு காண வேண்டும் என்ற நோக்கோடு பல வழிகளை கையாண்டனர். இதுவே இன்று எமது நாட்டுக்கும் இலங்கைத் தீர்வுக்கும் மிகப் பொறுப்பு வாய்ந்த தொடர்பை ஏற்படுத்தியுள்ளது. இதில் உங்கள் பங்கு மிக முக்கியமானது. உங்களுக்குள்ளும் சமூக-சமய மட்டத்தில் நாம் தேடும் அமைதியை அடைய ஒவ்வொருவரும் அர்ப்பணிப்புடன் பங்களிக்க வேண்டியது இன்றைய காலத்தின் தேவையும் ஆகும் என்றார்.

## பணித்தளங்கள் பற்றிய செய்திக் கொத்து

**உரும்பிராய்**
புனித. இம்மானுவேல் ஆலயத்தில் பணியாளராக சகோ. தயாளன் குருமனையில் குடும்பமாகத் தங்கி பணியாற்றுகின்றார். இவர் யாழ் பிரதேச முதல்வர் வண. N.J.ஞானப்பொன்ராஜா அடிகளாரின் கீழ் பணியாற்றுகின்றார்.

**கொக்குவில்**
புனித. திரித்து தேவாலயத்தின் பங்குத் தந்தையாக வண.ஜோர்ச் தோமஸ் அடிகளார் பணியாற்றுகின்றார். இவ்வாலயத்தின் புனரமைப்பு வேலைகள் மிகவும் துரிதமாக நடைபெறுகின்றது.

**நல்லூர்**
புனித. யாக்கோபு ஆலயத்தின் பங்குத் தந்தையாக வண. ஜோர்ஜ் தோமஸ் அடிகளார் ஆலயத்தின் புதிய குருமனையில் தங்கி பணியாற்றுகின்றார். இவ்வாலயத்தின் புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது.

**கோப்பாய்**
புனித. கன்னிமரியாள் அலயத்தின் பங்குத் தந்தையாக. யாழ். குருமுதல்வர் வண. S.P. நேசக்குமார் அடிகளார் பணியாற்றுகின்றார். இவ்வாலயம் அன்மீகப் பணியில் இவ்வருடம் 150 ஆண்டுகளை நிறைவு செய்கின்றது.

**தருமபுரம்**
சென். லூக்காஸ் ஆலயத்தின் பங்குத் தந்தையாக வண. சிறில் றோச் அடிகளார் பணியாற்றுகின்றார். இவ்வாலயம் புனரமைக்கப்பட வேண்டியுள்ளது.

**முல்லைத்தீவு - தண்ணீயூற்று**
சென்.மத்தையாஸ் ஆலயத்தின் பணியாளராக சகோ. அமுதராஜன் பணியாற்றுகின்றார். இவ்வாலயம் புனரமைக்கப்பட வேண்டியுள்ளது.

## ஆவியின் கொடைகளை தேடுவோம்

*- வண.J.ஜெபமோகன் -*

யாழ். குருமுதல்வரின் பிரதேசத்தைச் சேர்ந்த அனைத்து பணியாளர்களுக்குமான செயற் திட்டங்களைத் தீர்மானிக்கவும், பணி வாழ்வோடு ஒன்றிணைந்து பகிர்ந்து கொள்ளவும் நான்கு நாள் வதிவிட பணியாளர்கள் ஒன்றுகூடல் மே மாதம் வன்னிப் பெருநில சபைகளில் நடைபெற்றது. இதில் ஞாயிறு ஆராதனையில் அருளுரையாற்றிய வண. J. ஜெபமோகன் அடிகளார்,

திராட்சை செடியில் கொடிகள் இணைந்திருக்கும்போதே அவைகளால் கனி கொடுக்க முடியும். அதே வகையில் கிறிஸ்துவில் நாம் இணைந்திருக்கும்போதே ஆவியின் கனிகளை எம்மால் கொடுக்கமுடியும். ஆவியின் கொடைகளில் ஒன்றாகிய சமாதானம் எம்தேசத்திற்கு அவசியமானது. இதை விதைக்கும் மக்கள் கடவுளின் பிள்ளைகள் என்கின்ற பேற்றை பெறுகின்றனர் என்றார்.

யாழ். குருமுதல்வர் தலைமையில் ஒன்றுகூடிய பணியாளர்கள் வன்னிப்பகுதி எங்கும் சென்று மக்களோடு கலந்துரையாடி பங்குத் தளங்களையும் அதன் தேவைகளையும் அராய்ந்து செயற்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கான சந்திப்புகளை ஏற்படுத்திக் கொண்டனர்.

## தூர நோக்குடன் செயற்படுபவனே நல்ல தலைவன் ஆகிறான்

*- சுவாமி ஜெயசீலன் -*

தந்தை செல்வா தீர்க்க தரிசனப் பார்வையோடு பல கருத்துக்களை முன் வைத்தார். அவரது பேச்சுக்கள் என்பதைவிட அவர் ஆற்றிய தலைமைத்துவ செயல்கள் அவரை தமிழினத்தின் குரலாக அடையாளமாக வெளிப் படுத்தியது. அவரது வாழ்வில் இறையியலை அரசியலால் வெளிப் படுத்தி வாழ்ந்து காட்டியதால் அவரை தமிழினத்தின் தலைவனாக வழிகாட்டியாக இன்றும் நினைவு கூரப்பட்டு எல்லோர் மனங்களிலும் ஏற்று இடம்பிடித்தவராகினார் என்று யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சுண்டிக்குளி சென். ஜோன்ஸ் ஆலயத்தில் வண. ஞானப் பொன்ராஜா அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற தந்தை செல்வாவின் நினைவுதின வழிபாட்டின்போது சுவாமி ஜெயசீலன் அடிகளார் உரை யாற்றினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், நல்ல தலைவன் தூர நோக்குடன் சிந்தித்து வழிகாட்டுவான். அந்த வழியில் அரசியலை ஆன்மீக அகிம்சை வழிநின்று வாழ்ந்து, தீர்க்கதரிசனத்துடன் கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் நிறைவேறுகிறது. தந்தை செல்வா ஒருவருக்கோ, ஒரு மதத்துக்கோ சொந்தமானவர் என்று குறுக்கிவிடக்கூடாது. தந்தை செல்வநாயகம் ஒரு மதவாதியாக அல்ல, தமிழ் மக்களின் அடையாளமாக, குரலாக, தலைவராக, தீர்க்கதரிசியாக, வாழ்ந்து காட்டியவர் என்றார்.

இவ் ஆராதனையைத் தொடர்ந்து ஆலய மண்டபத்தில் யுாழ் கிறிஸ்தவ இளையோர் ஒன்றியத்தினால் Y.M.C.A தலைவர் D.R.அருமைநாயகம் தலைமையில் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் எழுத்தாளர் யோசப்பாலா உரையாற்றுகையில்.

அகிம்சை வழிமுறைகளைக் கற்றுக் கொள்ள ஆன்மீகம் சகல மதங்களிலும் வழிகாட்டியது. இதுவே இன்று மனித உரிமைச் சட்டங்களாக சிறுவர் உரிமை கோசங்களாக சட்ட வரைபுகளுக்குள் அடங்கியுள்ளது.

இன்று மனித உரிமை என்றால் என்ன என்பதே தெரியாத அடக்கப்பட்ட, ஆளப்பட்ட நிலையில் எதுவும் ஏற்றுக் கொண்ட மொனிகளாக வல்லமை உள்ளோர் வாழ உண்மைகள் ஊமையாக்கப் பட்ட நிலையில் சமூக சீரழிவு தலைதூக்கி உள்ளது.

(தொடர்ச்சி 3ம் பக்கம்...)

## சர்வமத ஒன்றியம்

*-புசல்லாவை-*

ஏறத்தாழ ஒரு வருடமாக இவ்வொன்றியம் புசல்லாவை மக்களுக்காக அரும்பணி ஆற்றி வருகின்றது. இந்நாட்டின் நான்கு மதங்களையும் சேர்ந்த குருக்கள், பிக்குகள், துறவிகள், மௌலவிகள், கன்னியர்கள் குழக்களாகச் சென்று பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் பிள்ளைகளுக்கும் வளர்ந்தோருக்கும் விழிப்புணர்வு ஊட்டி வருகின்றனர். இனமதப் புரிந்துணர்வு பான்மையில் ஒற்றுமை, பாலியல் வன்முறை, போதைவஸ்துகளின் ஆபத்து, மனித மான்பின் சிறப்பு போன்ற விடயங்களை ஒரே மேடையில் எல்லா மதத் தலைவர்களும எடுத்துரைக்கின்றனர். ஏழைகளுக்கு உதவுதல், உணவளித்தல், வைத்தியசாலைக்கு உதவுதல் போன்ற சமூக நலச் செயலும் அனைவரும் ஒன்றாகவே சென்று பங்கெடுத்தல் மூலம், மதங்களுக் கிடையேயுள்ள நல்லுறவையும், நல்உணர்வுகளையும் பகிரங்கப் படுத்துகின்றனர். ஒவ்வொரு சமயத்திலும், மதக்கல்வி பயிலும் மாணவ மாணவிகளின் மாநாடு ஒன்று அண்மையில் நடைபெறவுள்ளது. இச்சர்வதேச மத ஒன்றியத்தின் சட்டக்கோவை பின்வரும் நான்கோண அத்திவாரத்தில் நிலைநாட்டப் பட்டுள்ளது. அதாவது தம் மதத்தில் உறுதியும், அர்ப்பணிப்பும். இனமதப் பான்மை அங்கீகரிப்பு, மனித மாண்பின் மதிப்பு, பொதுநலத்தின் கூட்டுச் செயற்பாடு என்பனவாகும் என்று புசல்லாவை புனித திரித்துவ தேவாலய பங்குத் தந்தை அருள் கலாநிதி றெக்ஸ் ஜோசப் அடிகளார் தெரிவித்தார்.

## விடுமுறை வேதாகம கல்விசார் கருத்தரங்கு

கொழும்பு மறைமாவட்ட கிறிஸ்தவ கல்வி மன்றத்தின் பொறுப்பாளர் திருமதி மாலினி தேவானந்த அவர்களும் அவருடன் இணைந்த ஆறு பேர் கொண்ட குழவினரும் யாழ்.நகரில் ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியருக்கான பயிற்சிகளையும், பிள்ளைகளுக்கான விடுமுறை வேதாகம கல்விசார் கருத்தரங்குகளையும் நடாத்தினர். இறுதிநாள் பங்குபற்றிய பிள்ளைகள் அனைவருக்கும் நற்சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## பிரதேச ரீதியான அங்கத்தவர்களை உள்ளடக்கிய மன்றம்

பிரதேச ரீதியான அங்கத்தவர்களை உள்ளடக்கிய மன்றம் (RVRI DEACONAL CONFERENCE) 25-04-2002 அன்று சென். ஜோன்ஸ் கல்லூரி கேட்போர் கூடத்தில் ஒரு நாள் நிகழ்வு யாழ். பிரதேச முதல்வர் வண. N.J. ஞானப் பொன்ராஜா அடிகளார் தலைமையில் நடைபெற்றது. இதில் திரு. இஸ்ரேல் போல் அவர்கள் புதிய அங்கலிக்கன் யாப்பு பற்றிய விளக்கத்தைக் கொடுத்தார். அதனைத் தொடர்ந்து வறுமை ஒழித்தல், திருச்சபை ஐக்கியம், பெண்கள் குருத்துவம் போன்ற தலைப்புக்களில் கலந்துரையாடல்களும், ஒவ்வொரு சபைகளினதும் தேவைகள், அவற்றின் முன்னேற்ற வழிகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இறுதியாக ஆயரின் செயலாளர் திரு. லங்கா நேசையா அவர்களிடம் ஆயருக்கு அனுப்பும் செய்திகள் எடுத்துரைத்தனர்.

## குழுக்கள் சிறிதளவாயினும் செயல்கள் தரமாக்கப்படும்

**Rev.துசாந்தா றொட்ரிக்கோ**

இலங்கைத் திருச்சபையின் வாலிபர் அமைப்பு பொறுப்பாளர் தலைமையில், கொழும்பு மறை மாவட்ட குருமுதல்வர் பிரதேச எல்லைக்குட்பட்ட வாலிபர் அமைப்பு மன்றங்களின் நிர்வாகசுபை உறுப்பினர்கள், ஏ 9 பாதையூடாக யாழ். குருமுதல்வர் பிரதேசத்தில் இயங்கும் வாலிபர்களைச் சந்திக்க திடீர் விஜயம் மேற்கொண்டு ஒன்றுகூடலை ஏற்படுத்தி கலந்துரையாடி, மகிழ்ந்தனர். இதுவே முதல் தடவை இவ்வமைப்பு யாழ். நகருக்கு விஜயம் செய்ததாகும்.

இவ் ஒன்றுகூடலில் வாலிபர் மன்ற பொறுப்பாளர் வண. துசாந்தா றொட்ரிக்கோ அடிகளார் சிறப்புரையாற்றுகையில் வாலிப குழுக்கள் சிறிதாயினும் அக்குழுக்கள் தரமுடையதாக இருக்கின்றதா என்பதைத்தான் பாாக்க வேண்டும். எனவே வாலிபர்கள் இயங்க வேண்டும். நற்செய்தியின் வழியில், சமூகத்தினரையும் திருச் சபையையும கட்டியெழுப்பும் அமைப்புகளாக வளர்த்தோங்க வேண்டும்.

எமது சமூகத்தில் சீரழிந்து போகும் வாலிபாகள் மத்தியில் நீங்கள்தான் பணியாற்றி அவர்களை நல்வழிப்படுத்தும் கருவிகளாக விளங்க வேண்டும் என்று கூறினார். அதைத் தொடர்ந்து கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இதில் எல்லா குருமுதல்வர்கள் எல்லைக் குட்பட்ட வாலிபர்களின் செயற்பாடுகள் பகிரப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவு
THELIVU - YOUTHS OF JAFFNA ARCHSEACONERY CHURCH OF CEYLON

# தெளிவுரை

"உன் விசுவாசமே
உன்னை இரட்சிக்கும்"

"ஆண்டவரே! உமது உண்மைக்கு ஏற்ப
நான் நடக்குமாறு
உமது வழியை எனக்கு கற்பியும்
உமது பெயருக்கு அஞ்சுமாறு
என் உள்ளத்தை ஒருமுகப்படுத்தும்"
(திருப்பாடல் 86:11)

எண்ணங்கள் நிறைவேற
புதிய எண்ணங்கள் தோற்றம்பெறும்
ஆசைகளுக்கு எல்லையிராது
ஆடம்பரம் அலங்காரங்களில்
ஆலாய் பறக்கும் மக்களிடம்
ஆன்மீக நாட்டம் எதுவரையென்றால்
எல்லாம் மந்தமான மாயைநிலைதான்!

"நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே,
சிறிய பொறுப்புக்களில்
நம்பிக்கைக்குரியவராய் இருந்தீர்
எனவே பெரிய பொறுப்புக்களில்
உம்மை அமர்த்துவேன் என்றார்"
(மத்தேயு 25:23)

மனமே சித்தி
மனச்சாட்சி தீர்ப்பளிக்கும்

உன்னிடமுள்ள தாலந்துக்களை
உன் வாழ்வில் எதற்கு பயன்படுத்தினீர்
அறிவு, ஆற்றல், ஆளுமை எல்லாம்
நீ அறிவாய் ....

ஆனாலும், கலங்கிய குட்டையில்
மீன் பிடிப்பவர் போல்
போட்டி, போதனைகள்
புதுப்புது பெயர்களில்
புதிய மீட்பர்களாய்
சமாதானம் சொல்லி
சுற்றுலாவுக்கு வந்தவர்போல்
கடை விரித்து வருகின்றார்கள்
திருவிழாக் காலத்திலும்
தினிசான கவர்ச்சி கடைகளைப்போல்
திசை தேடி அலையும் மக்கள்
குழப்பத்தில் ஆழ்த்திவிட
ஆன்மீகப் பயணத்திலும்
அலைக்கழிக்கப் படுவோர் இன்று
ஏராளம் ஏராளம்
எல்லாமே எதிர்பார்ப்புடன்,
கூடிக்கலையும் போலிமாயைகளே!

வந்தார், நின்றார், சென்றார்
வருந்தியபோது எங்கிருந்தார் - இனி
எப்போ வருவாரோ என ஏங்கும்
தொண்டர் கூட்டத்துக்கு
தொல்லைகளும் அதிகம்தான்
கலங்காதே, பயப்பிடாதே
வருவோர், போவோர் வாழ்வை
வளப்படுத்த தொழிலாக்கியோர் மட்டில்
அனுதாபப்படலாம், ஆனால்
இறைவார்த்தையைப் புரட்டிப்பார்.

"போலி இறைவாக்கினரைக் குறித்து
எச்சரிக்கையாய் இருங்கள்
ஆட்டுத் தோலைப் போர்த்திக்
கொண்டு உங்களிடம் வருகின்றனர்.
ஆனால் உள்ளேயோ
அவர்கள் கொள்ளையிட்டுத் தின்னும்
ஓநாய்கள்"
(மத் 7:15)

அந்திக் கிறிஸ்துக்கள் தோன்றுவார்கள்
தான் தான் மீட்பர் என
உரத்துப் பேசுவதால் மட்டும்
உண்மைகள் ஆகிவிடாது
ஊர்க்குருவி ஒருநாளும்
பருந்தாகிவிடாது
"உன் விசுவாசமே
உன்னை இரட்சிக்கும்"

*ஆக்கங்கள் எழுதுங்கள் தெளிவு கண்டு பிரசுரிப்போம்.*

*ஆசிரியர்*
**தெளிவு**
யாழ்.குருமுதல்வர் காரியாலயம்,
452, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

விலை ரூ. 5/=

# பெந்தே கொஸ்தே விழா சொல்லும் செய்தி

*வண.அ.ஸ்ரீபன்*

நாம் கிறிஸ்தவ பண்டிகைகளை நோக்கும் போது யூத மதத்தினதும், கலாச்சாரத்தினதும் தாக்கத்தை இதனுள் காணலாம். இக் கருத்துக்கு சான்று பகரும் வகையிலேயே பெந்தெ கொஸ்தே பெருவிழா அமை கின்றது. யூதர்கள் தமது அறுவடைப் பொருட்களின முதன்மையானவற்றை கடவுளுக்கு காணிக்கை யாகப் படைக்கும நாளாகவும் இறைவனிடம் இருந்து மோசே பத்துக் கட்டளை களை பெற்றுக் கொண்டதை நினைந்து கொள்ளும் வகையில் இப்பண்டிகை அனுசரிக் கப்பட்டு வந்தது. "பெந்ரி" (Pento ) என்னும் கிரேக்க பதத்திற்கு 50 என பொருள்படும். இதனடிப் படையிலேயே ஆதிச் திருச்சபை இயேசுவின் உயிர்த்தெழுந்த நாளில் இருந்து 50ம் நாளில் திருச்சபையின் மீது தூய ஆவியானவர் பொழியப் பட்டார் எனக் கூறிவந்தது. எனவே இப்பண்டிகையை ஆதிச் திருச்சபை தூய ஆவியானவர் திரு அவை மீது பொழியப்பட்ட நாளாக அனுஷ்டித்தது.

அன்று ஆதிச் திருச்சபை தமது யூத கலாச் சாரத்தையும் அதன் பண்பாடுகளையும் மதித்து அதன் ஒளியிலேயே நற்செய்தியை பரப்பி வந்தது. இதனையே றிச்சேட் றீபர் என்ற அறிஞர் கூறும்போது "நற்செய்திக்கும் கலாச்சாரத்திற்கும் இடையிலே நெருங்கிய தொடர்பு அவசியம்" எனக் காட்டு கின்றார். இதற்கு உதாரண மாக இப்பண்டிகையைக் எடுத்துக் கூறலாம். யூத வரலாற்றில் அவர்களின் கலாச்சாரத்தில் தோன்றிய பண்டிகைக்கு ஆதி திருச்சபை புதிய விளக்கத்தையும், புதிய அர்த்தத்தையும் கொடுத்ததை நாம் காணலாம்.

நாம் வாழ்கின்ற உலகில் பற்பல காரணி களால் பிறரில் இருந்து வேறுபடுகின்றோம். மொழியால், இனத்தால், பாலால் வேறுபடுகின்றோம். இவ் வேறுபாடுகள் கடவுளால் உருவாக்கப்பட்டது. இதன் அடிப்படையில் ஒவ்வொரு கலாச்சாரமும், பண்பாடும் தனித்துவமானவையாக காணப்படுகின்றன. எனவே கலாச்சாரமும் பண்பாடுகளும் ஒன்றை ஒன்று வளர்க்கக் கூடிய வகையில், ஒன்றை ஒன்று தங்கியிருக்கக்கூடிய வகையில், ஒன்றை ஒன்று அபிவிருத்தி செய்யக்கூடிய வகையில் அமைய வேண்டும். இதனையே பெந்தெ கொஸ்தே பெருவிழாவில் பற்பல பாசைகளை பேசிய நிகழ்வு எடுத்துக் காட்டுகின்றது.

பேதுரு பேசிய பேச்சை அங்கு வந்திருந்த மக்கள் தத்தமது மொழியில் புரிந்து கொண்டார்கள். ஆனால் இங்கு வேறு பாடுகளின் மத்தியில் ஒற்றுமை என்ற சிந்தனை பிறக்கின்றது. எனவே பெந்தெ கொஸ்தே பெரு விழா தரும் இன்னு மொரு சவால் எமது சமுதாயத்தில் உள்ள வேறு பாடுகளை இனம் காணவும், அவற்றை வளர்க்கவும் எம்மை ஏவுகின்றது.

பழைய ஏற்பாட்டை வாசித்துப் பார்க்கும்போது ஆவியானவர் குறிக்கப்பட்ட காலத்தில் குறிக்கப்பட்ட மக்களுக்கு குறிக்கப்பட்ட பணியை செய்வதற்கு வழங்கப்பட்டு அர்ப்பணிக் காலம் நிறை வேறியவுடன் மீண்டும் எடுக்கப்பட்டதை நாம் காணலாம். ஆனால் புதிய ஏற்பாட்டில் ஆவியர் பொழியப் பட்ட நிகழ்வை பார்க்கும்போது அங்கு இனம், மொழி மதம், பால்,வயது முதலிய எல்லைகள் கடந்து எல்லா மககள்மீதும் ஆவியரின் அருள் அருளப் பட்டதை நாம் பார்க்கின்றோம்.

யூதர்கள் தாமே கடவுளால் தெரிந்து எடுக்கப் பட்டவர்கள். தமக்கே கடவுளின ஆவியர் சொந்தம் என மமதை கொண்டிருந்தனர். அவர்களின் மனக் கடினத் தை உடைக்கும் வகையில் யோவேலின் இறைவாக்கு அமைந்ததை நாம் காணலாம். ஆதாவது கடவுளின் ஆவி அனை வருக்கும் உரியது. அதனை எவரும் கட்டுப்படுதத இயலாது என்றார்.

இவ் இறைவாக்கு நிறைவேறிய திருநாளாக பெந்தெகொஸ்தே காணப்படுகின்றது. அங்கு கூடி வந்த மக்கள் அனைவர் மீதும், ஆவியர் அருளப்பட்டதை நாம் பார்க்கின்றோம். ஆவியர் வயது, இனம், மதம், பால், மொழி, கலாச்சாரம் அனைத்தையும் கடந்து செயற்பட்ட தற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும். ஆகவே ஆவியரை யாரும் உரிமைப் பொருளாக கூறிவிட இயலாது. ஆவர் பலமற்ற மக்களின் பலமாகவும், திக்கற்ற மக்களின் தோழ னாகவும் காணப்படுகின்றா

## முரண்பாடுகள் தீர வழி ஏது?

- யோகா -

கந்தோர் என்றாலே முரண்பாடு தானே

ஏன் அப்பிடி சொல்லுறீங்க. முரண்பாடுகள் இருப்பதால் தானே அதைத் தீர்க்க கந்தோருக்கு கடிதம் போடவும் அவர்கள் தீர்க்கவும் முடிகிறது. அதனால் தானே அவர்கள் வாழ உழைப்பும் கிடைக்கும். குடும்பமும் வாழும்.

அட இது தெரியுமா உமக்கு!

எங்கட கந்தோரில இப்ப பெரும் முரண்பாடு தெரியுமா

அது எப்பிடி அதுதானே முரண்பாடு தீர்க்கும் இடமாச்சே

இது இப்ப பல இடத்தில நடக்குது பாருங்க, நான் பெரிதா, நீ பெரிதா எண்ட போட்டி போட்டாங்க.

என்ன உடம்பாலயா?

இல்லை படிப்பு, பதவி, சம்பளம், எண்டு பல தினிசுகள் அதில இருக்க இப்ப ஒரு புது சிக்கல் வந்திருக்கு

அந்த சிக்கலை அவிட்டு விடும்பாப்பம்.

முரண்பட்ட அலுவலகத்தில முரண்பாடு தீர்கிற கருத்தரங்கு ஒண்டுக்கு ஒரு நிறுவனத்தில இருந்து அழைப்பு வந்தது. இருவா போனாங்க, அப்ப கந்தோரில கதைச்சாங்க இனி எமக்குள்ள ஆவது இனி முரண்பாடு இராது உண்டு ஆனா....?

என்ன ஆனா ஆவன்னா சொல்லுகிறீர்?

முரண்பாட்டு கருத்தரங்கு முடிஞ்சு வந்த பிறகு தானே பெரிய முரண்பாடாப் போச்சுது.

அது எப்படி

இருக்கிற கொம்புகளோட ஒரு கொம்பு கூடிற்றாம் அதுதான் முரண்பாடு தீர்த்தல் பயிற்சியில சான்றிதழ் உள்ளது. தான்மட்டும் தான் என தன் பெயருக்கு பக்கத்தில போட்டு அதையே சொல்லி முரண்பட்டுக் கொள்ளுறதால கந்தோரே முரண்பட்டு போச்சுது. பாருங்க அப்ப முரண்பாட்டை தீர்க்க சமாதானக் குழு அமைக்கலாமோ.

அப்பிடி ஏண்டா சமாதானமும் தீர்வும் முரண்படவேண்டித்தான் வரும். அதுக்கு ஓர் புரிநதுணவு ஒப்பந்தம் கைச்சாத்திடலாம். அதுகூட முரண்படாம இருக்க ஒரு பயிற்சி கொடுக்கலாமே.

பயிற்சிகள் பட்டங்களாகி சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுக்காம இருந்தால் போதும்.



## நீத்தார் நினைவுகள்

# வாழ்வினூடாக இறைபணியாற்றியவர்

கன. சாமுவேல் தேவதாசன் வொசிங்டன் அடிகளார் 04-02-2002 அன்று இவ்வுலக வாழ்வை முடித்து இறைபதம் தஞ்சம் அடைந்தார். இவர் தனது குருத்துவ பணியினை 50 வருடங்களுக்கு மேலாக பல்வேறு பணித்தளங்களில் நின்று ஆன்மீக-சமூக பணிகளை விழிப்பாயும், உற்சாகமாயும் செயற்பட்டுள்ளார்.

குறிப்பாக யாழ். குருமுதல்வராக நல்லூர் சென். ஜேம்ஸ் ஆலயத்தை மையமாகக் கொண்டு இந்திய இராணுவத்தின் கெடுபிடி காலத்தில் ஆற்றிய பணிகள் யாழ் மக்கள் மத்தியில் அழிக்கமுடியாத நினைவுகளாக என்றும் நிலைத்திருக்கும்.

அடிகளார் இடைவிடாத செபத்தலும், தாழ்மையான பெருந்தன்மையிலும், சபை மக்களின் சுக துக்கத்தில் கலந்தும், சபை வீடுகளை தரிசித்து ஆன்மீக வழியில் உயிர்ப்பூட்டியும், வருவது அவரின் வாழ்வோடு ஒன்றிணைக்கப்பட்டதாக காணப்படுகின்றது. இதுமட்டுமல்ல தனது சொந்த குடும்ப வாழ்விலும்கூட கிறிஸ்தவ விழுமியங்கள் வெளிப்படுமாறு வாழ்ந்து இறைவன் கொடுத்த பணியை நிறைவாக செய்து முடித்தார். இதைப்போல நாமும் நிறைவாழ்வு வாழ அழைக்கப்பட்டிருக்கின்றோம்.அடிகளாரின் நிறைவான வாழ்வுக்கும், அவரது குடும்பத்தினருக்காகவும் இறைவனிடம் நன்றி செலுத்துவோம்.

**வவுனியா**
தூய ஆவியானவர் ஆலயத்தின் பங்குத் தந்தையாக வண. பரிமளச் செல்வன் அடிகளார் பணியாற்றுகின்றார். இவ்வாலயத்தின் குருமனை புணரமைக்கப்பட வேண்டியுள்ளது.

**முல்லைத்தீவு**
"எலீம் சிறுவர் இல்லம்", இவ்வில்லத்தின் பாதுகாவலனாக (வோடனாக) சகோ. அமுதராஜன் பணியாற்றுகின்றார். இதில் பல வறுமைப்பட்ட, அநாதைச் சிறுவர்கள் தங்கி கல்வி கற்கின்றார்கள்.

**பளை**
புனித. அந்திரேயா ஆலயம் யுத்தத்தின் விளைவாக கூரை எதுவும் அற்று மிகச் சேதமுற்ற நிலையில் காட்சி தருகின்றது. இவ்வாலயத்தின் பங்குத் தந்தையாக வண. து. ஜெயமோகன் அடிகளார் பணியாற்றுகின்றார். தற்போது இயங்கவில்லை.

**உடுத்துறை**
புனித. மகதலெனா மரியாள் ஆலயம் யுத்தத்தின் விளைவால் பாதிக்கப்பட்டு இருக்கின்றது. இவ்வாலயத்தின் பங்குத் தந்தையாக வண. து. ஜெபமோகன் அடிகளார் பணியாற்றுகின்றார். தற்போது இயங்கவில்லை.

**கருணா நிலையம்**
பெண்கள் பராமரிப்பு நிலையத்தின் பாதுகாவலராக சகோ. கிளடிஸ் பணியாற்று கின்றார். இந்நிலையம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு காட்சி தருகின்றது. இந்நிலையம் தற்போர்து ஜெயபுரத்தில் இயங்குகின்றது.

# வாழ்வதற்கான உரிமை எல்லோருக்கும் உண்டு!

*வண.பிதா.இயூஜின், அ.ம.தி.*

வாழ்வதற்கான உரிமை என்பது மனிதனுக்கு அடிப்படை உரிமையாகும். (FUNDMAND) இந்த வாழ்வதற்கான உரிமை எல்லோருக்கும் உரித்தான உரிமை எல்லோரும் அர்த்த முள்ள வாழ்வு வாழத்தான் அழைக்கப் படுகின்றார்கள். அந்த வகையில் வாழுகின்ற உரிமை என்பது "பிறப்பதற்கான உரிமை களையும் தொடர்ந்து இயற்கை யான முடிவை சந்திக்கின்ற வரையிலும் வாழுகின்ற உரிமையைக் கொடுக்கின்றது".

இன்னொரு வகையில கூறுவதாயின் வாழுகின்ற உரிமை அழியாது, ஒரு பிரஜை சமுதாயத்தில் பிறந்து தனக்குரிய ஆளுமையை முழமையாக அனுபவித்து வாழ்வதற்குரிய சூழ்நிலை வாழ்கின்ற சமூகம் அவனுக்கு உதவி செய்வது ஒவ்வொரு வருடைய தலையாகிய கடமையாய் இருக்கிறது. ஆகவே வாழு கின்ற உரிமை மறுக்கப் படுகின்ற மனிதாபிமானத்துக்கு எதிரான உரிமை போராட்ட மாக உருவெடுக்கின்றது. இந்த வகையில் மனித அடிப்படை உரிமைகளாக:-

சமத்துவ உரிமை, சிந்தனை உரிமை, மனசாட்சி உரிமை, பேச்சு சுதந்திரம், கருதது சுதந்திரம், தொழில் விரும்பும் சுதந்திரம், விரும்பிய இடம் செல்ல சுதந்திரம், சித்திரவதைகளுக்கு உட்படுவதை தடுக்க சுதந்திரம் போன்றவைகள் மனித உரிமைகளுக்கு அடிநாத மாகவும் அத்திவாரமாகவும் அமைவது வாழுகின்றதற்கான உரிமையாக இருக்கின்றது.

இந்த அத்திவாரம் ஆட்டம் காணும்போது போராட்டமும், புரட்சியும், தனிமனிதன் தன் இருத்தலை அல்லது வாழ்தலை காப்பாற்றிக் கொள்வதற்காக மேற்கூறியவற்றில் எத்தனிக்கின்றான். இதற்கு உலக அரங்கில் நடந்தேறிய,

1688 ஆங்கில புரட்சி
1789 அமெரிக்க புரட்சி
1917 ரஷ்ய புரட்சி
1989 பிரான்சிய புரட்சி
போன்றவையாம.

அண்மைக் காலத்தில் எமது நாடுகளிலும் அயல நாடுகளிலும் நடைபெறுவதைக் காரணமாகக் கொள்ளலாம். ஆகவே மனிதன் வாழ விரும்புகின்றான் அவன் வாழ வேண்டும் முழுமையாக வாழ வேண்டும். குறைவில்லாமல் வாழ வேண்டும் மாண்போடு வாழ வேண்டும், இவை முளையிலேயே கிள்ளி எறியப்படுவதால் தான் அவன் வாழுகின்ற உரிமை வாழ்க்கை போராட்டமாக மாறுகின்றது.

(தொடர்ச்சி 4ம் பக்கம்...)

# கானாவூர்த் திருமணம்

கலிலேயாவில் உள்ள கானாவூரில்
கலியாணம் ஒன்று நடந்ததுவாம்
மரியாளும் இயேசுவும் சீடர்களும்
பிரியமாய் விழாவுக்கு அழைக்கப்பட்டனர்.
திராட்சை இரசமும் தீர்ந்திடவே
பரபரப் படைந்தனர் மணவீட்டார்
அதனை அறிந்த இயேசுவின்தாய்
அவர்மகன் இயேசுக் கறிவித்தார்
"இன்னும் என்நேரம் வரவில்லை"
என்று அன்னைக்குப் பதிலளித்தார்
"அவர் சொல்வதெல்லாம் செய்யுங்கள்"
என்றாள் அன்னை பணியாளரிடம்
ஆறுகற் சாடிகள் இருந்ததங்கே
அவற்றில் நீரை நிரப்பிடுங்கள்
என்று இயேசுவும் பணித்தாரே
யூதரின் தூய்மை முறைப்படியே
தூய நீரையும் நிரப்பினரே
இப்போது மெண்டு செல்லுங்கள்
பந்திமேற் பார்வை யாளனிடம்.
திராட்சை இரசமாய் மாறியநீரை
சுவைத்தான் பந்திமேற் பார்வையாளன்
திருமண விருந்தில் திராட்சைரசம்
பிந்தியதே தரம் குறைந்திருக்கும்
இங்கு பிந்தியதேநல் தரமானது.
என்று புகழ்ந்தான் மணமகனை
இதுவே இயேசுவின் முதற்புதமை
இயேசுவைப் போல்ப்பிறர்க் குதவிடுவோம்
தந்தையின் அரசைநிலை நாட்டிடுவோம்.

- *அபீர்ராஜன்* -

"அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்" மத்.5:9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூர நோக்கும், தூய செயலும், இறை பற்றுதியும் இருந்தால் எதையும் சாதிக்கலாம்

- யோசப்பாலா

## சிறப்புச் செவ்வி

ஈழத்து இலக்கிய வரலாற்றில் சிறுகதைத்துறையில் தடம்பதித்தவரும், 'அன்பகம்' சிறுவர் இல்லத்தின் தொடக்குனரில் ஒருவரும், 'நான்' சஞ்சிகை குழுவின் மூத்த உறுப்பினரும், இலக்கியத்துறையில் பல் பரிமாணம் பெற்றவரும், கியூடெக் உயிர்ப் பூட்டல் குழு இணைப்பாளராக பணியாற்றி பாமர மக்கள் மத்தியல் விழிப்புணர்வை ஏற்படுத்தி செயலூக்கம் கொடுப்பவரும், பயிற்சி பட்டறைகள், கருத்தரங்குகள ஊடாக புதிய இளம் தலை முறையினரை உருவாக்கி வருப வருமாகிய, பெரும் எழுத்தாளர் திரு.செ.யோசப்பாலா அவர்களை 'தெளிவு' கண்ட சிறப்புச் செவ்வி இதோ!

**உங்கள் ஆன்மீக சமூகப் பணி பற்றி...?**

ஆன்மீகம் குடும்பத்தினால் விதைக்கப்பட்டு சமயத் தலைவர்களால் வளர்க்கப்பட்ட வார்த்தைகளை வாழ்வாக்கி வாழ்ந்து காட்டியவர்களின் வாழ்வு என்னைப் பற்றிக் கொண்டது. இதுவே சமூக வாழ்விலும் இணைய வைத்தது. இதில் தடைகளும் சவால்களும் என்னைப் புடமிட்டது. குழப்பம், விரக்தி ஏற்படும் போது என்னை நெறிப்படுத்திய வர்களில் ஆன்மீகக் குருக்களும், நல் அறிஞர்களும் உள்ளனர். இதில் ஓம்லோ அடிகள், யோன் மேரி குசரோன் அடிகள், ஜெபநேசன் அடிகள், வின்சன் பற்றிக் அடிகள், ஜெயக்குமார் அடிகளார்களையும் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

**சிறுகதை ஆசிரியராய், பாடலாசிரியராய், நூலாசிரியராய், பத்திரிகையாளனாய், தொடர்பூடக வழியில் பரிணமிக்கும் உங்கள் அனுபவத்தில் இன்றைய தொடர்பியலூடகம் பற்றி கூற முடியுமா?**

மக்களைச் சிந்திக்கத் தூண்டவும், கருத்துக்களைப் பரிமாறவும் உறவுப்பாலமாக திகழ்வதில தொடர்பூடாக வழி சிறந்ததே. எங்கும் அதற்கென தனிமதிப்புண்டு. அதனைப் பயன் படுத்தும் முறைகள் கொச்சைப படுத்தப் படுவதுதான் அதன் வளர்ச்சி எம்மண்ணில் குன்ற காரணமாகின்றது.

முன்பு தரமான பத்திரிகையின் ஆசிரியர் யார் என கண்டு பிடிக்க முடியாது. அவரது செய்திகளாலே மக்கள் மனங்களைக் கவருவார். இப்போது தம்மைத்தாமே வெளிப் படுத்துவதே பத்திரிகை ஆசிரியப் பணியாகிவிட்டது. இதனால் செய்தியை விட பிரசாரப்பாங்கு, வாசகருக்கு சலிப்பை ஊட்டுகிறது.

உலகிலே மிக உயர்ந்த தொழில் செய்தியாளரும் காவல்த் துறையும் அதுவே நம் நாட்டில் இலகுவானதாகிவிட்டது. செய்தி தந்தால் போடலாம், யாரும் எழுதித் தரவில்லையே அருகில் நடந்தாலும் ஆள்பார்த்து தணிக்கை செய்வது,



நடைபெறும் இடமே தொரியாது செய்தியை திரித்து எழுத முனைவதும், சிலருக்கு புகழ்பாட முனைவதாலும் தரங்குன்றியது. காவல்த்துறையும் இது போன்றே கள்ளனையும், களவுப் பொருட்களையும் கொண்டு வந்து தந்தால் விசாரிப்போம் என்பதும் எமது நாட்டில் உயர்வான தொழில் கொச்சைப்படக் காரணமாகின்றது. இதனால் தரமானவர்கள்கூட மறைக்கப்படுகிறார்கள் தொடபூடகங்களில் நின்று சமூகப் பிரக்ஞைகளை வெளிப்படுத்துவதில் ஆத்ம திருப்தியும் ஏற்படுத்து கின்றது.

**பல்வேறுபட்ட தளங்களில் நின்று படைப்புக்கள் வரைய காரணம் என்ன?**

கதை, கட்டுரை, நாடகம், துணுக்குகள் என எழுத்துக்கள் அக்காலத்திற்கு ஏற்றதாகவே எழுதுவேன். சமூக, சமய, கட்டுரைகள் பத்திரிகைகளில் எழுதி வந்தேன் அதற்காக களத்தை உருவாக்கி நானும் எழுதி, பலரை எழுதத் தூண்டினேன். பல பட்டறைகள், பயிற்சிகள் பல களங்களிலிருந்து நடாத்தி புதிய படைப்பாளிகளை கண்டதால் நல்ல அறுவடைகள் நம்பிக்கை யூட்டுகின்றது.

எழுத்துக்களை மற்றவரை திருத்தமுற்பட்டதோ என்னவோ எழுத் தாளனை திருத்தி விடும். படைப் பாளிக்கு வரையறை வழிகாட்டி நிற்பதும் அவனது எழுத்துக்களே. என்பதை என் அனுபவத்தில் உணர்கின்றேன். எழுத்தும் வாழ்வும் சமனிலைப் படும் போது சமூக நேசிப்பும், பணியும், தானாகவே ஏற்படும்.

**இன்றைய இளை யோரின சமூகச் சீரழிவுகளை எப்படி மாற்றிக் கொள்ளலாம்?**

நேற்றைய சிறுவர்களை வழிப்படுத்த தவறியமையே இன்றைய இளையோரின் பிரச்சினையாகியது. இளையோர் சிறுவர் மட்டத்தில் ஏற்பட்ட அழுத்தத்தையே இன்று வெளிபடுத்து கின்றார்கள். இவை தொடராமல் இருக்க இளையோர்களை வழிப்படுத்த முயற்சிக்கும் அதே வேளை இன்றைய சிறுவரின் மட்டில்' கூடிய கவனம் எடுத்தல் மிகவும் அவசியமானது.

**ஆண்மீகத்தில் குடும்ப, வழிகாட்டிகளின் பங்களிப்பு போதுமானதா?**

நாம் பெற்றதை பகிர பல வழிகளுண்டு.வெறும் போதனைகள் மட்டும் ஆன்மீகத்தை வளர்த்து விடாது. வார்த்தைகள் வாழ்வாக மாறும் நிலைதான் பங்களிப்பாகும்.

உறவாடல்,உரையாடல் யாவும் முன்பு சட்டமாக, கட்டளையாக,குற்றமாக, ஏற்கப்பட்டது. இப்போ இதை சம நிலையில், நம்பகத் தன்மையுடன் பகிரப்பட வேண்டியுள்ளது. அதற்கான அற்பணிப்புக்கள் தியாகங்கள் சவால்கள் எதிர் கொள்ளும் வாழ்வும் ஓர் சிலுவைப்பாதைதான் இதனை ஏற்று அப்பாதையில் பயணிப்போரும் எம்மண்ணில் வாழ்வது நம்பிக்கையைத் தருகின்றது.

பிறக்கும்போதே ஓர் குழந்தை வழிகாட்டல் பெற்றோரிடம் ஆரம்பிக்கிறது. அந்தப் பெற்றோர் இடும் பெயரில் இன்றைய நாகரீக மோகமும் ஆன்மீக ஆழமற்ற தன்மையும் புரியாத புதிராக பெயரிடப் படுகின்றது. சடங்குகளில் மட்டும் சமயவாதியாக அடையாளமிடப்படுகின்றது. பாடசாலை யிலோ. தொழிலகத்திலோ. வெளிப்படுத்த முடியாதவர்களால் செயல்களும் வளர இளையோரின் இன்றைய தவறான செய்கைக்கும். ஆன்மீக வழிகாட்டலின்மையும் முக்கிய காரணமாகின்றது இதனைப் பொறுப்புடன் வழிநடத்த பொறுப்புள்ளவர்கள் முன்வருதல் முக்கியமானது என்பேன்.

**சமூக சமயப் பணிகளில் உங்களுக்கு ஏற்படும் சவால்களை எப்படி முகங் கொடுப்பீர்கள்?**

பல்வேறுபட்ட சவால்களை எதிர் கொண்டேன். சவால்களே வாழ்வைப் புடமிடுகின்றது. அந்த சவால்களைச் சாதகமாக்கிக் கொண்டதால்தான் என்முயற்சியின் முன்னேற்றத்திற்கு வழி பிறந்தது. தூர நோக்கும், தூய செயலும் இறைபற்றுறுதியும் இருந்தால் எதையும் சாதிக்கலாம். இதை எழுத்திலும், வாழ்விலும், சமூகப் பணியிலும் நான் கடந்து வந்த சவால்களே எனக்கு சாதகமாகியது.

எழுத்துத் துறையிலும் சமூகப் பணியிலும் எனக்கு ஊக்கமூட்டியவர்கள் என் உயர்வு கண்டு மகிழ்வு கொண்டவர்கள் மட்டில் மதிப்பு வைத்துள்ளேன். குதர்க்கம் பேசுவோர் சூழ்ச்சி செய்வோர் மட்டில் அனுதாபப் படுவதும்,அலட்சியப் படுத்துவதும் எனது அணுகு முறையாகும். சவால்களை சாதகமாக்க சந்தர்ப்பங்களை பயனுள்ளதாக்குவதே எனது வழி.

**தெளிவு பத்திரிகை பற்றி உங்கள் கருத்து....**

காலத்தின் தேவையே ஆன்மீகத்தின் தெளிவுதான். குப்பைகளை குவிக்கும் குப்பைத் தொட்டிகளுள் ஆன்மீக செய்திகளைத் தேட முடியாது தவிக்கும் வாசகர்களுக்கு தெளிவின் வரவு நம்பிக்கை ஊட்டுகின்றது.

குறுகிய காலத்தில் தெளிவின் வளர்ச்சி ஆன்மீகத் தாக்கத்தை தூன்டுவதோடு சர்வமத ஜக்கிய உறவையும வளர்த்து வலம்வருவது உலகெல்லாம் நற்செய்தியை பறை சாற்றுங்கள் என்ற வார்த் தைக்கு அர்த்தமூட்டுகின்றுது.

வாசக இதயங்களின் கருத்துப் பரிமாற்றம் தெளிவின் இலக்கு பிசகாது வழிநடாத்தும் நல்லுள்ளங்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

### இவரின் எழுத்துருக்கள் சில

உணராத உண்மைகள் (சிறுகதை)
திருப்பம் (சிறுகதை)
தரிசனம் (சிறுகதை)
மகிழ்ச்சியின் இரகசியம் (உளவியல் கட்டுரை)
கிசு கிசு 100 (துணுக்குகள்)
வார்த்தை வழி (ஆன்மீகம்)
வார்த்தை வழி ஆன்மீக

ஒலிநாடாக்கள்
யூபிலி 2000
தேவகானம் (CD கசெட்)
நாடகம்
தேடல்
அதுஒரு இது
எங்கே போகின்றோம்?

# விழித்தெழுவீர்!

- வண.தோமஸ் ஜோர்ஜ் -

ஆன்மீக விழுமியங்கள் சிதைவுற்று மனித பண்பாட்டு கலாச்சார சமூக- சீர் கேட்டு செயல்களில் இன்றைய தொடர்பு சாதன ஊடகங்கள் மூலம் சிறியோர் முதல் பெரியோர் வரை மூழ்கிதிண்டாடும் நிலை ஏற்படுகின்றது. தினம் தினம் தரும் பத்திரிகை செய்திகள், வியாபாரத்தை மையமாக கொண்டதால் மீண்டும் வக்கிரத்தன்மைகளையும், சினிமா பாலியல் தூண்டுதல்களையும், விதைத்து சமூகக்கட்டமைப்பு பண்பாட்டு விழுமியங்களுடன், ஆன்மீகப் பற்றுறுதியையும் சீரழிப்பதில் வேகமாக முன்னேற மனைகிறது.

ஆபாசக் கவர்ச்சிப்படங்களும் கசற்றுக்களும் தீயிட்டுக்கொழுத்தும் அவ்வேளையில் பதுங்கிக்கிடந்து கணணிகளுக்குள் முடங்கி இள வயதினரை தவறான வழிக்கு இட்டுச்செல்வதிலும் பெரும் கரிசனையாக உள்ளவர்கள் எம்மத்தியில் உலா வருவதை விழிப்புடன் களைதலும் இன்றைய தேவையாகும்.

"விரியன் பாம்புக்குட்டிகளே, வரப்போகும் சினத்திலிருந்து தப்பிக்க இயலும் என உங்களிடம் சொன்னவர் யார்? மன மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்டுங்கள், ஆபிரகாம் எங்களுக்குத் தந்தை என உள்ளத்தில் சொல்லத் தொடங்காதீர்கள். இக்கற்களிலிருந்தும் ஆபிரகாமிற்குப் பிள்ளைகளைத் தோன்றச் செய்யக் கடவுள் வல்லவர் என உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏற்கனவே மரங்களின் வேரருகே கோடாலி வைத்தாயிற்று. நற்கனிதரா மரங்கலெல்லாம் வெட்டப்பட்டு தீயில் போடப்படும்'' லூக் 3:8-9. என்ற திருமுழுக்கு யோவானின் கண்டிப்பு எமக்கு தரும் பாடம் மனமாற்றம் என்பது எமது செயல்களினால் வெளிப்பட வேண்டும் இல்லாவிட்டால் இறுதி நாளில் கடவுளின் சினத்திற்கு உட்பட வேண்டிவரும் என்பதே!

எனவே விழிப்பாய் இருங்கள்! மனுமகனின் தண்டனைக்கு அளாகாது இருக்க ஒவ்வொருவரும் தம்பொறுப்புக்களில்கடமை உணர்விலிருந்து தவறுதல் மட்டுமல்ல தவறுகளைக்கண்டும் காணாது ஒதுங்கி இருப்பதும், அதற்கு உடந்தையான செயல்களே, தவறுக்கு பங்காளராக இருப்போரை கண்டும் காணாது இருப்போரே விழிப்பாய் இருங்கள். எதை விதைப்பீர்களோ அதையே அறுவடை செய்வீர்கள்!

# 'சீடத்துவத்தின் விலை'

வண.சா.பி.கிருபானந்தன்

"எனது மக்களின் இக் காலத்தின் துன்பியலை பகிரா விட்டால் யுத்தத்தின் பின் யோ்மனில் கிறீஸ்தவ வாழ்வை புனரமைப்புச் செய்வதில் பங்கு பற்ற எமக்கு உரிமை இல்லை" என்று டெயிற்றிச் பொன்கோ.·.வர் தனது நன்பனுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டார்.

1937இல் இவரது கருத்துக்களின் தொகுப்பாக வெளிவந்த சீடத்துவத்தின் விலை (Cost of Descipleship) என்ற நூல் மலைப் பொலிவை பற்றிய சிந்தனைக் கருவை வைத்தது. இயேசு கிறீஸ்துவை சாதாரணமாக பின்பற்றுவதை விட உறுதியாக அவரது பாடுகள் மரணத்தைப் பற்றிப்படிக்க வேண்டும். சாதாரணமான நிலைக்கு அப்பாறபட்ட மதிப்பு மிக்க அருள்பற்றி(Costly Grace) இவர் குறிப்பிட்டார். மண்ணுலகில் அவர் திருவுளம் இன்றி எதுவும் நம்மைத்தொட முடியாது மலிவான அருன் (Cheap grace) இன்றைய கிறீஸ்தவ வாழ்வை அறிவியல் ரீதியதாக மலினப்படுத்திய நிலையை உருவாக்கியுள்ளது என விமர்சித்தார். கிட்லரின் ஆட்சியின் போது லூத்தரன் சபை அரச கருத்துக்களின் ஆதரவை அளித்த போது இவரது மனவறிக்கை திருச்சபை(Confessing Church) தூத்தரன் சம்மேளனத்தின் இருந்து விலகிக் கொண்டது. யோ்மனியில் இரகசிய குருத்துவக்கல்லூரி ஒன்றைத் தொடங்கினார். சிறையிலிருந்து அவர் எழுதிய குறிப்புக்கள் இறையியல் புரட்சியை ஏற்படுத்தின.

1933இல் நாசிசம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து 18மாதம் லண்டனில் யோ்மன் கிறீஸ்தவர் களின் சிறியதொரு சபைக்கு பணியாற்றிய காலத்தைவிட மற்றைய காலம் முழுவதும் நாசிசத்திற்கு தனது எதிர்ப்பைக் காட்டினார். தனது தாய் தந்தையருடன் நியூயோர்க் நகரத்தில் புலம் பெயர்ந்த போதிலும் போர் முடிவடைந்ததற்கு முன் யோ்மன் திரும்பினார். இருவார காலம் மட்டும் அமெரிக்காவில் தங்கி யிருந்நதார். நாசிசத்தின் எதிர்ப்பியக்க மையமாக திகழ்ந்த யோ்மன் உளவுப்படையில் சம்பளமற்ற ஊழியராக இயங்கினார். 1944இல் கிட்லர் படு கொலைத் திட்டம் பிசு பிசுத்தது. 5 ஏப்பிரலில் 1943இல் கெற்சப்போவினால் கைது செய்யப்பட்ட கொடுமைப்படுத்தப்பட்டார். இறுதியில் இவர் 1945 ஏப்பிரல் மாதம் 9ம் நாள் பேர்லின் சிறையில் தூக்கிலிடப்பட்டார்.

சகோ.சாள்ஸ் டி பூக்கோ என்ற பிரஞ்சு சிறிய சகோதரர் காட்டிய சீடத்துவத்தின் எளிமை மிக்க வாழ்வும் பொன்கோவர் யோ்மன் லூர்த்தரன் போதகரின் சீடத்துவத்தின் விலை என்ற இறை அனுபவம் என்ற இரு போக்குகளும் 20ம் நூற்றாண்டில் இறுதிப்பகுதியில் கிறீஸ்தவ ஆன்மீகவியலில் பாரிய தாக்கத்தை உருவாக்கியது என்று மதிப்பிடுவது பொருத்தமாகும்.

# தெற்கில் இருந்து சமாதான முயற்சி வெற்றிபெற வேண்டும்

வடக்கு-தெற்கு சமய சமாதான அமைப்பினர் 31-06-2002 அன்று காலை யாழ்.மறைக்கல்வி நடுநிலையத்தில் இங்குள்ள சர்வமதப் பெரியோரை சந்தித்து உரையாடினர்.

இச்சந்திப்பில் அங்கிலிக்கன் திருச்சபையின் யாழ்.குருமுதல்வர் வண.S.P.நேசக்குமார் உரையாற்றுகையில் கூறியதாவது;

தென்னிலங்கையில் இருந்து சமாதான முயற்சி வெற்றிபெற வேண்டும் என்று நீங்கள் குரல் கொடுத்த ஒரே காரணத்தினாலேயே நாங்கள் இன்று சர்வமதக்குழுவுடன் சேர்ந்து இயங்க முன் வந்துள்ளோம்.

நீங்கள் வந்த இப்பயணத்தின் மூலம் யாழ்.மக்களின் நிலைமையை அறிந்து கொள்வீர்கள் என்பது உண்மையிலேயே ஒரு கேள்விக்குறியாகவே தோன்றுகிறது. இதற்கு முன்பும் பல முறை பல இடங்களுக்கு சென்று உரையாற்றினோம் ஆனால் உண்மையிலேயே ஒன்றும் நடக்கவில்லை. அது போல இல்லாது இந்த முயற்சி கட்டாயம் வெற்றியை பெற்றுத்தர வேண்டும் என்பது எங்களின் பேரவா என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்நயம்



நூல்:-
"அற்புதமான ஒருமணி"
ஆங்கில ஆசிரியர் :-
**Linda Schubert**
மொழிபெயர்ப்பாசிரியர் :-
றோஎல் தேவராஜா
பதிப்பாசிரியர்:-
**Rev.N.J.**ஞானப்பொன்ராஜா
விலை :- 20/=

**வாழ்க்கையை நல்வழிப்படுத்தும், அற்புதமான ஜெபத்தை ஏறெடுக்க ஓர் வாழிகாட்டியாக இந்நூல அமைகின்றது. கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் இடைவிடாத ஜெபத்தில் ஆன்மீக பெலனடைய வேண்டும். அதனால் வாழ்வில் வரும் சோதனைகளை எதிர் கொண்டு வாழ உதவியாக இருக்கும். எனவே நாம் இந்நூலை வாசித்து சிறந்த செபவீரர்களாக மிளிருவோம்.** - தெளிவு -

## தூர நோக்குடன் செயல்படு......

அகிம்சை வழியை அரசியல் வாழ்விலும் வாழ்ந்து காட்டிய தந்தை செல்வாவின் வாழ்வு இன்று நினைவு கூரப்பட்டு கொண்டபோதும், அகிம்சையை ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவம் எங்கள் மனதில் விதைக்கப்பட்டதா என்றால் கேள்வியாகவே உள்ளது.

பாதையாத்திரை, உண்ணா நோன்பு, ஆன்மீக வழிபாடு, அகிம்சை வழி, சாத்வீகப் போராட்டம் இன்றும் நடைபெறுவது பற்றிய நம்பிக்கை வளர்க்கப்பட சிறுவர் மட்டில் பெரியோர் அகிம்சையின் அர்த்தங்களை விதைக்க வேண்டும். அகிம்சை வழியில் உள்ள ஆற்றல்களை வெளிப்படுத்தும் ஆன்மீக வழிகளை ஆளப்படுத்த வேண்டும். சொல்லுக்கு சொல்லும், பல்லுக்கு பல்லும் எடுக்கும் வன்முறைக்கு விதையிடுவது சகல மட்டத்திலும் வளர்வதால்தான் அகிம்சையும், ஆன்மீகமும் மனித உரிமைகளை சட்டவழி தேடிச் சென்று பார்க்க முனைகிறது.

எதையும் சொல்வதைவிட செயற்ப டுத்துவதில் முன்வருதலே முன்மாதிரியாக அமையும். பெரிய அளவில் செய்வோம் என திட்டமிட்டு அறிக்கைகளுக்குள் அடக்கப் படுவதைவிட சிறிய அளவில் செயல்படுவதே இக்காலத்தின் தேவையாகும்.

மனித உரிமை அகிம்சை வழியில் ஆன்மீக தளங்களில் மட்டமல்ல ஒவ்வொரு இல்லங்களிலும் விதைக்கப் படுவதோடு, அடக்கப்பட்ட மக்கள் வாழும் சிறிய குழுக்கள் மட்டிலும் நல்லதை சிந்திப்போம். செயல்படுத்துவதில் முன்வருதலே முதல் ஆரம்பமாக இருக்கட்டும் என்றார்.

இக்கருத்தரங்கில் பல்வேறுபட்ட இன்றைய கால மனித உரிமை மீறல்களும் அதனை அகிம்சை வழியில் விழிப்பூட்டும் வழிகளையும் கலந்து ரையாடி பெரியோர் மட்டில் சமூக மட்டத்தில் செயல்பட பல தீர்மானங்களை எடுத்தனர். இவை மிகவும் பயனுடையதாக இருந்தது.

"உங்கள் பகைவரிடமும் அன்பு கூறுங்கள்" மத். 6:44

# ஆன்மீகமுடே.....!

எட்டு லட்சம் நரம்புகளிகன்
எண்ணற்ற கணத்தாக்குகளை
தட்டுத்தடுமாற்றமின்றி
தன்வழியில் ஒருங்கிணைக்க
ஒற்றைக்காலில் நின்றது மனம்!

மனமெனும் தளமதை
முறுவிலா நிறைவுடன்
தினமொரு வழியே
தீட்சை செய்ய அழைக்குது புலன்!

ஆன்மீகம் என்பது
அடைதலின் ஒருவழி
வான்போல பரந்த
வாழ்க்கையின் வீதியில்
ஆண்டவன் சந்நிதி
அழைக்கும் தனிவழி!

சிந்தனை செய்வோம்
சீர்பட வைப்போம்
நிந்தனை கொண்டு
நிதமும் நாம் வாழ்வதா?

மனதினில் புலனை
மையமாய் கொண்டு
புலனினை தெளிவுடன்
புண்ணிய வழிதனில்
விலகிடா ஆன்மீக
விடியலை நோக்கி
நடத்திட நாமினி
தொடருவோம் வாழ்வதை..!

- சூரிய நிலா -
ஈச்சமோட்டை

# முடியுமா உங்களால்?

மனித வாழ்க்கையிலே முன்னேற்றம் காணப்பட வேண்டும் என்றால் மீண்டும் மீண்டும் முயற்சிக்க வேண்டும் "முயற்சிதான் மெய்வருந்தக் கூலிதரும்' "முயற்சி உண்டேல் இகழ்ச்சி இல்லை" இக்கூற்றுக்களுக்கேற்ப நாம் உளத்திடத்தோடு 'என்னாலும் சாதிக்க முடியும்' அதனால் வெற்றி காணமுடியும் என்று திடசங்கற்பம் கொண்டு எங்கள் இலட்சியங்களை செயற்படுத்தி முயன்றால நிச்சயம் வெற்றி எமக்கே!

நாம் ஒவ்வொருவரும் 'வெற்றி எமக்கே' என்ற நம்பிக்கை கொண்ட வீர மனத்தோடு எமது இலட்சியப் பாதையிலே வீர நடைபோட வேண்டும்.

"எனக்கு கணக்கெண்டால் சுத்த சூனியம், நான் என் னெண்டுதான் சோதினை பாஸ் பண்ணப்போறேனோ தெரியாது"

"நான் கணக்கெண்டால் ஓரளவு செய்வன் உந்த சயன்ஸ்தான் எனக்கு மண்டையில ஏறாது"

"நீ படிச்சே சோதினை செய்யிறனீ, நான் படிக்காமல்த்தான் சோதனை செய்யிறனான், இங்கிலீசுக்குப் படிச்சாலும், படிக்காட்டாலும் ஒரே மாக்ஸ்தானே வரப்போகுது"

"ஒருவருடைய எண்ணம் போலவே அவருடைய பார்வையும், வாழ்க்கையும் அமைகின்றது" என்ற உளவியல் கூற்றுக்கு ஏற்ப நாம் நல்லவற்றையும், நேரான சிந்தனை களையும் எப்போதும் கொண்டிருக்க வேண்டும். அப்போது வாழ்க்கை செழித்து சாதனை பல புரியமுடியும்.

நேப்போலியன் என்கின்ற மாவீரன் "முடியாது என்ற சொல் முட்டால்களின் அகராதி யிலேதான் காணப்படுகின்றது" என்று சொன்னார். முடியாது என்று சொல்லை நெப்போலியன் அறவே வெறுத்தான் அதனால்த் தான் உலகப் பெரும் தளபதிகளுள் ஒரவனாக இன்றைக்கும் அவன் மதித்துப் போற்றப் படுகின்றான்.

மருந்தில்லா மருத்துவம்
- ராதி -

வரலாற்று மகா புருசனாக இன்றைக்கும் வாழ்ந்து கொண்டி ருக்கின்றான்.

நெப்போலியனின் வாழ்க்கையில் மட்டுமல்ல உலகத் திலே தலைசிறந்து விழங்குகின்ற பெருந் தலைவர்கள் மேதைகள், ஞானிகள் எல்லாம் 'முடியாது' என்ற தன்மையை அறவே வெறுத்து. எம்மால் முடியும்"என்ற தன்னம் பிக்கையோடு முயன்றார்கள். அதனால் அந்தந்த துறைகளிலே வெற்றி கண்டு மிளிர்கின்றார்கள் மற்றவர்கள் தூங்கும் போது இவர்கள் விழித்திருந்து முயன்றார்கள் முயன்றால்தான் வெற்றி காண முடியும் என்ற மந்திரத்தை தினம் ஓதி செயற்பட்டார்கள். தோல்வியைக் கண்டு துவண்டு போகாமல் அதனை ஏற்றுக் கொண்டு. அதிலிருந்து விடுபட முயற்சியும் செய்தார்கள். இதனால் உலகம் பேசும் அளவிற்கு உயர்ந்து நின்றார்கள்.

"வறுமையை ஒப்புக் கொள்வதில் இழிவில்லை. ஆனால் அந்த வறுமையைக் கடக்க முயற்சி செய்யாமல் இருப்பதே இழிவு" என்று பௌக்கீஸ் என்பவரின் கருத்துக்கேற்ப நாம் எமது இயலாமை என்னும் நோயை விரட்ட வழி தேடுவதில் தவறில்லை. ஆனால் அந்த இயலாமையில் இருந்து விடுபட வழிதேடாமல் இருப்பது தான் தவறு.

அந்த வகையிலே எமது இயலாமைக்கு என்ன காரணம்? அது ஏன் தோன்றுகின்றது? அதிலிருந்து விடுபட என்ன முயற்சி எடுக்கவேண்டும்? என்ற கேள்வி களை எம்மை நாமே பார்துக் கேட்டு தீர்வு காண மருந்து மாயைகளைத் தேடி அலையாது. மருந்தில்லா மருத்துவம் உங்க ளிடமே உண்டு. முயன்றால் முடியும் முயன்று பாருங்களேன்!

## வேண்டும்!

ஆண்டவா!
ஆருள் இரக்கம் பூண்டவா,
அனைத்துலகும் வேண்டு
கின்றோம்
அனைத்தெம்மை நீர்
காத்தருளும்
நீண்டது மது அருளினாலே
நிலமதனில் நின்அமைதி
நிலைத் தோங்க ஆசி வேண்டும்.
ஆண்டாண் அடிமை வாழ்வு நிலை
அறவே தான் நீங்க வேண்டும்
அனைத்துலக மக்கள் வாழ்வு
அன்பு உறவாழ் நிலைக்க வேண்டும்.

S.அடைக்கலம்
ஓய்வுபெற்ற அதிபர்.




## இளைஞரின் உள்ளக் கிடக்கை

இருக்கிற சில நாட்களில்
'இன்ஜோய்' (enjoy ) பண்ணுவம்,
இளைஞரின் உள்ளக் கிடக்கை
இது.

'ஏ9' பாதை திறந்தது,
எடுத்தனர் ஏ.சி.பஸ்-இளைஞர்
சென்றனர் தலைநகர்
சுற்றினர், சுழண்டனர், மயங்கினர்.
பின்னர்.

யாழ் மண் வந்ததும்
சீ என்ன வெக்கை கைஸ் ஸ்ரடீஸ்
(high studies ) ஒன்று மில்லை
இங்கு,

ஆதலால்
ஓடுவம் கொழும்பிற்கு- இன்றைய
இளைஞரின் உள்ளக்கிடக்கை இது.

பூங்குழலி
அரியாலை.

## புது யுகம் மலரட்டும்

கறை படிந்த காலங்கள் கடந்திடவே
புது யுகம் மலரட்டும்.
சண்டைகள் நீங்கி சமாதானம் மலர்திட
புது யுகம் மலரட்டும்.
சாதி, மதம் ஒளிந்து சமத்துவம் ஓங்க
புது யுகம் மலரட்டும்.
சிறைகளை சிதைத்து சுதந்திரம் மலர
புது யுகம் மலரட்டும்.
ஒருமன ஒற்றுமை ஓங்கிட
புது யுகம் மலரட்டும்.
துளிர்விடும் சமாதானம் கிளைவிட
புது யுகம் மலரட்டும்.

தோ.நிக்சன்
தூய ஆவியானவர் ஆலயம்
வவுனியா.

## மனிதம் எங்கே

புறாவிடம்
கண்டேன்
சமாதானம்
குயிலிடம்
கேட்டேன்
சங்கீதம்
காக்கையிடம்
மெச்சினேன்
ஐக்கியம்
பருந்திடம்
பார்த்தேன்
வெறி
பூனையிடம்
ரசித்தேன்
விழுமியம்
மனிதனிடம்
பார்த்தேன்
மிருகத்துவம்
மிருகத்திடம்
பார்த்தேன்
மனிதம்
ஆச்சரியமுற்று
அதிர்ந்துதான்
போனேன்

எம்.பீ.நளீம்
ஓட்டமாவடி -
வாளைச்சேனை

## களையெடுப்பு

ஹயஸ் வானும்
கீறோ கொண்டாவும்
கொண்டு ஊர்
சுற்றுவது

வேடிக்கையில்
மனம் இலயித்து
கோடிட்டுத்
தலைவெட்டிக்
குறுந்தாடி விட்டுக்
குடித்தாடிக்கிடந்து
கேம் எனக் கேட்டு
வீம்பு பேசுவதும்

இளைஞனே
சமூக மேடையில்
உன்னை
ஏற்றும் ஏணி
என்ற
எதிர்பார்ப்பு
உன் பளிங்குப்
பாதையில்
நீ தூவும் முட்களின்
விதைகள்

இனியேனும்
மாற்றத்திற்கு
வழிவைத்து
உன் பாதையில் நல்ல
பூக்களைத்துாவு

நா.நவராஜ்
கொழும்புத்துறை.

## தெளிவுப் பெட்டகம்

உயிர்க்கும் சக்தி கொண்ட தெளிவு தெளிவிற்கு அள்ளித் தரும் தெளிவு பத்திரிகைக்கு என் வாழ்த்துக்கள். கிறிஸ்தவ பத்திரிகைகள் அருகி வரும் இக்காலத்தில் கட்டவிழ்ந்து மணம்பரப்பும் தெளிவு ஆன்மீகத் தெளிவிற்கு வழிகாட்டியாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சிறுவர் தொடக்கம் முதியோர் வரைக்கும் பயன்படக்கூடிய விடய ங்கள் இதில் அடங்கி இருப்பது இதன் சிறப்பாகும். சிறுவர் முற்றம், அன்பின் தம்பி தங்கையருக்கு, என்னும் பகுதிகள் சிறுவரைச் சிந்திக்கவும் செயல்ப்படவும் வைக்கும் ஆற்றல் மிக்கவை. மனித உயிரின் மாண்பை மறந்திருக்கும் இக்கால கட்டத்தில் அதன் மதிப்பை எடுத்துக்காட்ட எழுதப்பட்டிருக்கும் கட்டுரை காலத்திற்கேற்றதொன்று. முதியோரையும் பாடசாலை மாணவர் களையும் தன்னிடம் ஈர்க்கும் சக்தி வாய்த தெளிவு இன்னும் தரமான ஆன்மீகக் கட்டுரைகள் பேட்டிகள் சிறுவர் பகுதிகள், கருத்துக் குவியல்கள் எனப்பல வடிவங்களில் மணம் வீசி தெளிவு இன்னும் பல பக்கங்களில் மலர்ந்து சிறக்கும் என்பதில் ஐயமில்லை.

திருமதி P.F.சின்னத்துரை
அதிபர்,
யாழ்.புனித சாள்ஸ் ம.வி.

கலாச்சாரத்தை நோக்கி......

தெளிவு பத்திரிகை இதழ் 5 கிடைத்தது. வாசித்து மகிழ்ந்தேன். உண்மையில் தெளிவு ஒரு புதினமான பத்திரிகை, கலாச் சாரத்தை நோக்கி நகர்வதை என்னால் விளங்க முடிந்தது. ஆனாலும் தெளிவின் பக்கங்கள் போதாமை பெரும் குறையாகவே இருக்கின்றது. இன்னும் சில பக்கங்கள் கூட்டப்படும்போது. தெளிவின் தரமும். மெரு கூட்டப்படும். எனவே தெளிவு தொடர்ந்தும் தொய்வின்றிநல்ல தரமுடையதாக வெளிவர மனமார வாழ்த்துகிறேன்.

எம்.பி.நளீம்,
ஓட்டமாவடி, வாழைச்சேனை.
துணையாசிரியர் - 'புதியதொனி

இறையியல் சார்ந்த.

தெளிவு கிடைத்தன நன்றி தெளிவு நல்ல முயற்சி சமூக மாற்றத்திற்கு இப்படிப்பட்ட பத்திரிகைகளின் பங்களிப்பு மிக அவசியம், பந்திகள் அடர்த்தியாக உள்ளன. இலகுபடுத்தவும், சமயத் தோடு விடுதலை இறையியல் சார்ந்த சிந்தனைகளை. முன்வை யுங்கள். தெளிவு தொடர்ந்தும். ஆன்மீகத் தேடல் உள்ள மனிதர் களுக்கு ஆன்மீக உணவாக வெளிவர மனமார வாழ்த்துகிறேன்.

அட்டன் (HATTON)
பெனி.யே.ச.,
ஆசிரியர்-மாலைக்குரல

## வாழ்வதற்கான...

(2ம் பக்கத் தொடர்ச்சி...)

### உரிமைக்கு தடையாய் இருப்பது

மனிதன் வாழ்வதற்கும், வளர்வதற்கும், உண்பதற்கும், உடுத்து வதற்கும், உறைவிடம் தேடிக் கொள்வதற்கும் உரிமையோடு பிறக்கின்றான். இது அவனுக்கு பிறப்புரிமை. ஆனால் இவை கீழ் குறிப்பிடும் பல்வேறு காரணி களால் சிதைக்கப் படுகிறது.

வறுமை. சாதி வேறுபாடு, மத அடிப்படைவாதம், ஆண், பெண் பாலியல் வேறுபாடு, மொழி பிரச்சனை போன்றவைகள் காரணிகளாகும்.

இந்த வகையில் திருச்சபையும் ஐ. நாடுகள் மனித உரிமை பிரகடணமும் ஏனைய மனித உரிமை அமைப்புக்களும் இந்த மனிதன் வாழ்வதற்காக குரல் கொடுத்து வருவதை நாம் நாளாந்தம் காணலாம். இந்த வகையில் நாமும் மனிதனின் வாழுகின்ற உரிமை பாதிக்கப் படுகின்ற அல்லது அழிக்கப் படுகின்ற சந்தர்ப்பங்களை நாம் பார்ப்போமாகில், உறுப்பு சிதைவு, கொலை தற்கொலை. சிசு கொலை போன்றவற்றின் வழியாக மனிதன் வாழும் உரிமையை இழக்கின்றான். (வத்திக்கான் ஏடு 672ம் பக்கம் திரு. மனித அமைப்பு)

திருச்சபை கோட்பாடுகளும் உலக மனித அமைப்புக்களின் கோட்பாடுகளும் ஏனைய சமய கோட்பாடுகளும் கூறுவதுபோல ஒருவன் உயிரை ஒருவன் பறிப்பதற்கு உரிமையில்லை. அத்தோடு ஒருவன் தன் உயிரைக் கூட தற்கொலை என்ற ரீதியில் மாய்த்து கொள்ள உரிமையில்லை என்பதாம். இவற்றை 1963ம். ஆண்டு அவனியில் அமைதி என்ற 23ம் அருளப்பர் எழுதிய சுற்றுமடலும் 1965ம் கூடிய 2ம் வத்திக்கான் சங்கம் மனித மீட்பர், மனித உழைப்பு, மனித குடும்ப வாழ்வு போன்ற சுற்றுமடல்களும் தெளிவாக விளக்கி நிற்கின்றது.

வாழ்வதற்கான உரிமை என்பது வெறுமனே உயிரை காத்துக் கொள் வதற்கான உரிமை மட்டுமல்ல மாறாக நானும் நீயும், நாமும் சமுதாயத்தில் கௌரவத்தடன வாழும் உரிமையாகும். இவை இன்று உலக நாடுகளிலும் எமது உள் நாடுகளிலும் ஒரு கேள்வியாக சவால் நிறைந்ததாக இருக்கின்றது.

இன்று நாம் எவற்றைக் கொண்டு இவற்றைத் தடுக்கலாம். ஒருவரின் பிறப்புரிமையை வாழுகின்ற உரிமையை எவற்றைக் கொண்டு கொடுக்கலாம். ஏனெனில், தனிமனிதனுக்கு மட்டும் வாழுகின்ற உரிமையல்ல. இது குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் உரித்தானது. ஆகவே இவை அடிமட்டத்தில் உருவாக்கப்பட வேண்டும். ஒவ்வொரு தனிமட்டத்திலும் சமூகத்திலும் நாட்டிலும் உலகிலும் இதற்குத் தீர்வு காணப்பட வேண்டும். கருக்கலைப்பும், கருச்சிதைவு, உறுப்புச் சிதைவு, ஆட் கடத்தல், குடும்பக் கட்டுப் பாடு,மரண தண்டனை, தன்னிச் சையான மரணம், பெண்சிசு கொலை, வரதட்சணைக் கொலை, இரக்கக் கொலை, விபசாரக் கொலை, யுத்த ரீதியான கொலைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு மக்களுக்கு வாழுகின்ற உரிமை கொடுக்கப்பட வேண்டும் இதைத்தான் கடவுளின் படைப்பு மனித உரிமை அமைப்புக்களும் சமய அமைப்புக்களும் எம்மிடமிருந்து எதிர்பார்த்து நிற்கின்றது. இதனால் எமது முடிவு தீர்மானம் நானும் நீயும் வாழும் நிலை வேண்டும், என்ற செயற்பாடு முன்னெடுக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org